Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
STC No. 125 /2023

## Deposition of P.W.2

| | | |
|---|---|---|
| Name | : | ஜானகி |
| Husband's Name | : | வீரமுத்து |
| Village | : | உசிலங்குளம், புதுக்கோட்டை |
| Religion | : | இந்து |
| Age | : | **64/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.06.2024**
(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். )

<u>**முதல்விசாரணை**</u>

நான் தற்போது புதுக்கோட்டை, உசிலங்குளத்தில் என் கணவருடன் வசித்து வருகிறேன். நான் படிக்கவில்லை. வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மாமன் மகன் ஆவார். சுமார் **1 1/4** வருடத்திற்கு முன்பு இருக்கும். எங்களது பூர்வீக ஊரான வடகாட்டிற்கு சென்று அங்கு உள்ள எங்களது மனைக்கட்டில் வீடுகட்டுவதற்காக நானும் என் கணவரும் சுத்தம் செய்து கொண்டிருந்தோம். அப்போது காலை **11.00-11.30** மணியளவில் ஆஜர் எதிரி குடிபோதையில் அங்கு வந்து என் கணவரின் சட்டையை பிடித்து சிறிது தூரம் இழுத்து சென்று இங்கு வந்து எதற்கு வீடு கட்டுகிறாய் என்று வாய்க்கு வராத கெட்ட வார்த்தைகளால் எங்களை அசிங்கமாக திட்டினார். பிறகு எதிரி கம்பால் என் கணவரை உடம்பு முழுவதும் அடித்துவிட்டார். பிறகு காயம்பட்ட என் கணவரை ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுவந்தோம். அங்கு வடகாடு போலிசார் வந்து விசாரித்து என் கணவரிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் நான் சாட்சியாக கைரேகை செய்து கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கைரேகை என்னுடையதுதான். அந்த சாட்சி கைரேகை அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எனது தம்பி பெயர் சிவா ஆகும். இந்த வழக்கின் சம்பவம் சம்பந்தமாக விளக்கம் சொல்லி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டும் என என் தம்பி சிவா போலிசாரிடம் கேட்டுக்கொண்டார் என்றால் சரிதான். நாங்கள் சுத்தம் செய்ததாக சொல்லும் இடத்தில் உள்ள

வாழைமரங்கள் எதிரியால் வளர்க்கப்பட்டவை என்றால் சரிதான். நாங்கள் சுத்தம் செய்ய செல்வதற்கு முன்பாக எதிரியிடம் அனுமதி வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் எங்களுக்கு சொந்தமானதா இல்லை எதிரிக்கு சொந்தமானதா என்ற பிரச்சனை 4, 5 வருடங்களாக உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தின்போது எதிரி என் கணவரை தாக்கவில்லை என்றாலும் நானும் என் கணவரும்தான் எதிரியை தாக்கினோம் என்றால் சரியல்ல. நானும் என் கணவரும் சேர்ந்து எதிரியை தாக்கி எதிரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. அதுசம்பந்தமாக எதிரி என்மீது புகார் அளித்தார் என்றால் சரியல்ல.

2. எதிரியின் அண்ணனிடமிருந்து நாங்கள் சொத்தினை கிரயம் வாங்கியுள்ளோம் என்றால் அதுபற்றி விவரம் எனக்கு தெரியாது. என் கணவருக்குதான் தெரியும். நான் சொல்வதுபோல் எதிரி என் கணவரின் சட்டையை பிடித்து இழுத்து செல்லவில்லை என்றாலும், அசிங்கமாக பேசி அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. இடப்பிரச்சனையை மனதில்கொண்டு என் தம்பி திட்டமிட்டு தயார் செய்த பொய்யான புகார் வாக்குமூலத்தில் என் கணவர் கையொப்பம் செய்தார் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல சம்பவம் நடக்கவில்லை என்றாலும் வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>